# காரைநகர் பிரதேச சபை

# யாழ்ப்பாண மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 04 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 07 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்ரெம்பர் 22 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை காரைநகர் பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

i. நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள் பொறுப்புக்கள் மற்றும் செலவுகள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | சொத்துக்கள் | | பொறுப்புகள் | | செலவுகள் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங் களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங் களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங் களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | 01 | 129இ000 | - | - | | |
| அதிகரித்துக் கூறல்கள் | - | - | 01 | 450 | 01 | 13இ590 |
| வகைப்படுத்தல் | 01 | 1இ450 | | | | |

ii. சபையின் பாவனையிலுள்ள நான்கு வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு இறுதிக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்காமையால் சொத்தின் பெறுமதி கணக்குகளில் குறைத்து காட்டப்பட்டுள்ளது.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 129இ000 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

1.3.3 இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைக்கான சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| 2002ம் ஆண்டின் 14ம் இலக்க பெறுமதி சேர் வரிச்சட்டம் | மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட பெறுமதிசேர்வரி ரூபா 178,344 உள்நாட்டு இறைவரித் திணைக் களத்திற்கு அறிக்கையிடும் திகதி வரையும் செலுத்தப் பட்டிருக்கவில்லை. |
| உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் 2009ம் ஆண்டில் 09ம் இலக்க நாட்டைக் கட்டியெழுப்பும் வரிச்சட்டம் | மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட ரூபா 3,590 நாட்டை கட்டியெழுப்பும் வரி உள்நாட்டு இறைவரித் திணைக் களத்திற்கு அறிக்கையிடும் திகதி வரையும் செலுத்தப்ப ட்டிருக்கவில்லை. |
| 1988ம் ஆண்டின் பிரதேசசபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி | |
| அத்தியாயம் ஐஐஐ பிரிவு 4 | சபை தொடங்கிய காலமாகிய 2006ம் ஆண்டிலிருந்து குறித்த சபையினால் ஆதனவரி மதிப்பீடு தொடர்பாக மதிப்பீட்டு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 540இ614 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீண்டுவரும் வருமானத்திலும் கூடிய செலவினமாக ரூபா 566இ913 விளைந்திருந்தது.

### 2.2 நிதிசார் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 82இ095 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 1இ968இ553 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ’000 | ’000 | ’000 |
| ை.இறைகளும் வரிகளும் | 30 | 64 | - |
| ைை.குத்தகை வாடகைகள் | 267 | 269 | - |
| ைைை.அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1இ783 | 1இ743 | - |
| ைஎ.வேறு வருமானங்கள் | 12இ780 | 12இ866 | 3இ938 |

2.3.2 நீதிமன்றத் தண்டப்பணம்

---

ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றங்களிலிருந்து 2012, 2013 ஆகிய காலப்பகுதிக்குரிய ரூபா 604இ742 நீதிமன்றத் தண்டப்பணம் அறக்கையிடும் திகதி வரையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.3 முத்திரைத்தீர்வைக் கட்டணம்

---

2012,2013 ஆகிய காலப்பகுதிகளுக்கு காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டணங்கள் ரூபா 2இ871இ905 வருமானமாக கணக்கிடப்பட்டதேயன்றி அறிக்கையிடும் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.3.4 வருமான இழப்பு

---

பிரதேசசபை ஆரம்பிக்கப்பட்ட காலமாகிய 2006 ம் ஆண்டிலிருந்து வீத வரி அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதுமட்டுமன்றி அறிக்கையிடும் திகதிவரையும் சபையியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் காணி கட்டிடங்களுக்கு வீதவரி மதிப்பீடுகள் விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் மேற்கொள்ளப் பட்டிருக்கவுமில்லை.

2.4 சொத்து முகாமைத்துவம்

---

2.4.1 வாகனப்பயன்பாடு

---

சபையில் மூன்று உழவு இயந்திரங்கள் பயன்பாடின்றி காணப்படுகிறது.

2.4.2 தலைமை அலுவலக கட்டிட அமைப்பு

---

சபையில் தலைமை அலுவலக கட்டிட அமைப்பிற்காக 2008ம் ஆண்டின் ஆரம்ப நடவடிக்கையான அத்திவார அமைப்பிற்காக ரூபா 2,019,602 செலவு செய்யப்பட்ட நிலையில் கட்டிடம் அமைக்கப்படாது பயன்பாடின்றி சொத்தாக்கம் செய்யப்பட்டுள்ளது.

2.4.3 சபையின் இருப்பில் தட்டச்சு இயந்திரம், மொனிற்றா, பிறின்ரா ஆகியன கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக பழுதடைந்த நிலையில் களஞ்சியத்தில் காணப்படுகின்றது.

2.4.4 பயன்படுத்தப்படாத மின் விளக்குகள்

-------------------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் கொள்வனவு செய்யப்பட்ட 50 எண்ணிக்கையான மின்விளக்குகளின் பெறுமதி ரூபா 129இ000 அறிக்கையிடும் திகதிவரையும் பயன்பாடின்றி சபையின் களஞ்சிய அறையில் இருப்புப் பதிவேடுகளில் பதியப்படாது காணப்படுகின்றது.

2.4.5 செயற்பாடுகளின் செயற்திறமையின்மை

---------------------------------------------------------

i. சபையினால் மீளாய்வாண்டில் மூலதன அபிவிருத்தி ஒதுக்கமாக ரூபா 2இ928இ000 வருமதி வருமானங்களுக்கு எதிராக கணக்கிடப்பட்டதேயன்றி அபிவிருத்தி ஒதுக்கத் தொகை எதிர்கால அபிவிருத்தி வேலைகளுக்காக வங்கியில் நிலையான வைப்பில் இடப்பட்டிருக்கவில்லை.

2.5 ஒப்பந்த நிர்வாகம்

------------------------------

முற்றாக கைவிடப்பட்ட செயற்திட்டம்

-------------------------------------------------------

நடைமுறையாண்டில் பாதிடப்பட்ட ரூபா 250,000 பெறுமதியான மூலதன 3 வேலைத் திட்டங்கள் முற்றாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.6 திண்ம கழிவு முகாமைத்துவம்

--------------------------------------------

சபையின் எல்லைக்டகுட்பட்ட பிரதேசத்தில் இருந்து பெறப்படும் குப்பை கூளங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதேயன்றி கொம்பொஸ்ட் செயற்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------

பின்வரும் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. வருமானசேகரிப்பு
ii. வாகனப் பயன்பாடு
iii. வரவு செலவுத்திட்டம்